இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"திருத்தூதர் பவுல் சுட்டிக்காட்டுவது போல, தூய ஆவியாரே நமக்கு ஜெபிக்கக் கற்றுத் தருகிறார். பெந்தேகோஸ்தே நாளிலிருந்து, தூய ஆவியார் திருஅவையில் குடிகொண்டு, அதன் ஒவ்வொரு செயல்பாட்டையும், குறிப்பாக ஜெபத்தையும் வழிநடத்துகிறார்."

# ஜெபம் என்பது நம்பிக்கையின் அடையாளம்



இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் வழிபாட்டுமுறை பற்றிய அறிக்கை 'சாக்ரோசாங்தும் கொன்சீலியம்' (Sacrosanctum Concilium) குறித்து திருத்தந்தை லியோ தனது ஐந்தாவது மறைக்கல்வி உரையை வழங்கினார். இதில் வழிபாட்டுமுறை ஜெபத்தின் திருஅவைச் சார்ந்த முக்கியத்துவத்தைப் பற்றிச் சிந்தித்த அவர், வழிபாட்டை "இறைவன் தம் திருமகன் வழியாக மனிதகுலத்தை அணுகி வரும் சந்திப்பின் மையம்" என்று விவரித்தார்.

காஸ்டெல் கந்தொல்ஃபோவில் (Castel Gandolfo) பல வார கோடைக்கால ஓய்வுக்குப் பிறகு, புதன்கிழமை (ஆகஸ்ட் 5) திருத்தந்தை லியோ தனது பொது மறைக்கல்வி உரையை மீண்டும் தொடங்கினார். தூய பேதுரு பெருங்கோவிலில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான விசுவாசிகளிடையே உரையாற்றிய திருத்தந்தை, வழிபாட்டுமுறை ஜெபத்தின் முக்கியத்துவத்தை மையமாகக் கொண்டு 'சாக்ரோசாங்தும் கொன்சீலியம்' பற்றிய தனது சிந்தனைகளைத் தொடர்ந்தார்.

"திருத்தூதர் பவுல் சுட்டிக்காட்டுவது போல, தூய ஆவியாரே நமக்கு ஜெபிக்கக் கற்றுத் தருகிறார். பெந்தேகோஸ்தே நாளிலிருந்து, தூய ஆவியார் திருஅவையில் குடிகொண்டு, அதன் ஒவ்வொரு செயல்பாட்டையும், குறிப்பாக ஜெபத்தையும் வழிநடத்துகிறார்." அன்றைய நாளிலிருந்து, "திருஅவை பாஸ்கா மறைபொருளைக் கொண்டாட ஒன்று கூடுவதை ஒருபோதும் கைவிட்டதில்லை" என்று அவர் குறிப்பிட்டார்.

## ஜெபத்தை அதன் உண்மையான வடிவில் மறுபயனீட்டுடன் உணர்தல்

"நமது காலத்தில், நுகர்வோர் மனப்பான்மையும் பயனுடைமைவாதமும் நிறைந்த சூழலில், ஜெபம் என்பது பயனற்றதாகவும் முக்கியத்துவமற்றதாகவும் தோன்றலாம். அறிவியலும் தொழில்நுட்பமும் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்க முடியும் என்று உரிமை கோரும்" உலக வழலில், ஜெபிப்பது என்பது பொறுப்புகளிலிருந்து தப்பிக்கும் ஒரு வழியாகவோ அல்லது தனிப்பட்ட மன அமைதிக்கான மற்றொரு உளவியல் நுட்பமாகவோ தோன்றலாம். "இருப்பினும், ஜெபம் என்பது அதன் உண்மையான வடிவில் மீண்டும் கண்டறியப்பட வேண்டிய ஒன்று" என்று திருத்தந்தை வலியுறுத்தினார்.

## இறைவனைச் சந்திக்கும் இடம்

'சாக்ரோசாங்தும் கொன்சீலியம்' என்ற சங்க ஆவணம் இந்தத் தேவையை தீவிரமாக எடுத்துக்கொண்டது. "ஜெபம்" என்ற சொல் ஒட்டுமொத்த திருவழிபாட்டையும் குறிக்கிறது. இந்தப் பார்வை மிகவும் முக்கியமானது என்று தெளிவுபடுத்திய திருத்தந்தை, "ஏனெனில் இதுவே வழிபாட்டுமுறை சீர்திருத்தத்தை வழிநடத்தி, விசுவாசிகளின் சுறுசுறுப்பான பங்கேற்பை அதன் மையத்தூணாக மாற்றியது" என்றார்.

வழிபாடு என்பது எல்லாவற்றிற்கும் மேலாக இறைவன் தம் திருமகன் வழியாக மனிதகுலத்தை அணுகி வரும் சந்திப்பின் மையமாக வெளிப்படுத்தப்படுகிறது.

## அன்றாட வாழ்வைப் புனிதப்படுத்துதல்

ஒவ்வொரு வாரமும், ஒவ்வொரு நாளும், நற்கருணை வழிபாடும் மணிநேர செபமும் (Liturgy of the Hours - திருப்புகழ்மாலை) திருஅவையின் வாழ்வின் மூச்சுக் காற்றாக இருந்து, தூய ஆவியார் அதன் உடல் முழுதும் இயங்கச் செய்கிறது. இந்த ஜெபத்தில், இயேசு கிறிஸ்து முழு மனிதகுலத்தையும் தம்மோடு இணைத்து, இறைபுகழ் பாடும் தம் சொந்தப் பாடலில் மனிதகுலத்தையும் பங்கெடுக்கச் செய்கிறார்.

"தனக்கு ஒளிதரும் நற்கருணையோடு இணைந்து, மணிநேர செபம் (திருப்புகழ்மாலை) நமது அன்றாட வாழ்வின் நேரத்தைப் புனிதப்படுத்துகிறது" என்று கூறிய திருத்தந்தை லியோ, ஜெபத்தின் வெவ்வேறு நேரங்களை விவரித்தார்: "காலையில், விசுவாசத்தோடும் நன்றியுணர்வோடும் அந்நாளைத் தொடங்குகிறோம்; நண்பகலில், நமது உழைப்புக்கு மத்தியில் விசுவாசத்தில் நிலைத்திருக்க பலம் கேட்கிறோம்; மாலையில், வேலை முடிந்ததும், அந்திப் பொழுதை மாலைப் புகழுடன் கடக்கிறோம்; இரவில், இறைவனின் அமைதியில் நம்மை ஒப்படைத்து உறங்கச் செல்கிறோம்."

"ஒவ்வொரு மணிநேர செபமும் நம்பிக்கையின் வெளிப்பாடு" என்று கூறித் தனது உரையை நிறைவு செய்த திருத்தந்தை லியோ, "நமது உலகப் பயணத்தில், திருஅவையோடு இணைந்து விழித்திருந்து, ஆண்டவரின் மகிமையான இரண்டாம் வருகைக்காகக் காத்திருக்கிறோம்" என்றார்.

தமிழாக்கம் ஹெரால்டு

# அனைவரும் சொந்தமாக உணரும் தேவாலயம்

இதுவே இவ்வாண்டு ஆகஸ்ட் 1-ஆம் தேதி காஜாங், திருக்குடும்ப தேவாலயத்தில் (Church of Holy Family, Kajang) நடைபெற்ற சிறப்புத் தேவைகளுடையோருக்கான ஆண்டுக் திருப்பலியின் நோக்கமாக அமைந்தது. கோலாலம்பூர் மறைமாவட்ட மறைக்கல்விப் பணிக்குழுவால் (Kuala Lumpur Archdiocesan Catechetical Ministry) ஏற்பாடு செய்யப்பட்ட இத்திருப்பலி, சிறப்புத் தேவைகளுடைய சிறுவர்கள், பெரியோர்கள், அவர்களது குடும்பத்தினர், பராமரிப்பாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் ஆதரவாளர்களை விசுவாசம், உள்ளடக்கம் மற்றும் சமூக உணர்வோடு ஒன்றாக இணைத்தது.

தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக நடைபெறும் இத்திருப்பலியில் மறைமாவட்டம் முழுவதிலிருந்தும் திரளானோர் பங்கேற்றனர். தெலுக் இன்தான் (Teluk Intan) போன்ற தொலைத்தூரப் பகுதிகளிலிருந்தும் குடும்பங்கள் கலந்துகொண்டனர். மேலும், பிற சமயங்களைச் சேர்ந்தவர்களும் இதில் பங்கேற்றது அன்பு, கண்ணியம் மற்றும் சகோதரத்துவம் ஆகியவை சமய எல்லைகளைக் கடந்தது என்பதை உணர்த்தியது.

இத்திருப்பலியை கோலாலம்பூர் மறைமாவட்ட பேராயர் ஜூலியன் லியோவ் பெங் கிம் தலைமை தாங்கி நடத்தினார். திருக்குடும்ப ஆலயத்தின் பங்குத்தந்தை அருட்திரு மைக்கேல் சுவாவும் (Rev. Fr. Michael Chua) இணைந்திருந்தார். வழிபாட்டின் போது பங்குத்தந்தை மைக்கேல் சுவா சைகை மொழியிலும் திருப்பலியை மொழிபெயர்த்து, வழிபாடு அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்ற திருஅவையின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினார்.

காலை 10.00 மணிக்குத் தொடங்கிய இத்திருப்பலியில், சிறப்புத் தேவைகளுடைய நபர்கள் முதல் வாசகத்தை வாசித்தும், பதிலுரைப்பாடலை நயம்பட வழிநடத்தியும் திருவழிபாட்டுப் பணிகளில் முக்கியப் பங்காற்றினர். இதன் மூலம் திருஅவைச் சமூகத்தில் பணியாற்றுவதற்கு அனைவருக்கும் இடம் உண்டு என்பது அழகாக வெளிப்பட்டது.

பேராயர் ஜூலியன் லியோவ் தமது மறைவுரையில், "நாம் எதிர்பாராத நபர்கள் மூலமாகவே கடவுள் பெரும்பாலும் நம்மிடம் பேசுகிறார்" என்று நினைவூட்டினார். "கடவுள் நமக்கு இறைவாக்கினர்களை அனுப்பியுள்ளார் - நாம் கற்றுக்கொள்ளக் கடினமாக நினைக்கும் பாடங்களை நமக்குக் கற்றுக்கொடுக்க, நம் வாழ்வில் சில சிறப்பு மனிதர்களை அவர் கொடுத்துள்ளார்," என்று அவர் கூறினார்.

அன்றைய நாளின் வாசகங்களைச் சுட்டிக்காட்டிய பேராயர், இரக்கம், பொறுமை மற்றும் புரிதலை நமக்குக் கற்றுக்கொடுக்கவே கடவுள் சிறப்புத் தேவைகளுடைய குழந்தைகளை நம் மத்தியில் அமைத்துள்ளார் என்பதை நாம் உணர வேண்டும் என்று ஊக்குவித்தார். அமைதியான அல்லது கவனிக்கப்படாத மனிதர்களின் குரல் வழியே கடவுள் பேசுவதை நாம் உண்மையிலேயே செவிமடுக்கிறோமா என்று சிந்திக்க அழைப்பு விடுத்தார். இறைவாக்கினர் எரேமியா மற்றும் திருமுழுக்கு யோவான் ஆகியோரின் மாதிரிகளை மேற்கோள் காட்டிப் பேசிய அவர், கடவுள் திருநூல் வாயிலாக மட்டுமல்லாமல், நமது மனச்சான்று, இயற்கை மற்றும் நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதரின் வழியாகவும் பேசுகிறார் என்றார். கடவுளின் அமைதியான குரலைக் கேட்கும் அளவுக்கு அமைதியான இதயத்தை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று கூறித் தம் மறையுரையை நிறைவு செய்தார்.

இறுதி ஆசீர்வதிக்கான ஜெபத்திற்கு முன், மறைமாவட்ட மறைக்கல்வி மையத்தின் இயக்குநர் டாக்டர் ஸ்டீவன் செல்வராஜு (Dr Steven Selvaraju) இந்த ஆண்டு விழாவின் நோக்கங்களை நினைவூட்டினார். முதலாவதாக, பெற்றோர் மற்றும் பராமரிப்பாளர்கள் அனைவரும் உள்ளடங்கிய ஒரு சூழலில் இறைவனை வழிபட இது வாய்ப்பளிக்கிறது. இரண்டாவதாக, ஒவ்வொரு ஆண்டும் வெவ்வேறு பங்குகளில் இத்திருப்பலி நடத்தப்படுவதால், பங்கு மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுகிறது.

"ஒவ்வொரு முறையும் வெவ்வேறு பங்குகளில் இச்சிறப்புத் திருப்பலியை நடத்துவதன் மூலம், அப்பங்கின் உறுப்பினர்கள் தங்கள் மத்தியில் வாழும் சிறப்புத் தேவைகளுடைய நபர்களைப் பற்றி அறிந்து கொள்ளவும், அவர்களின் தனித்துவமான சூழ்நிலைகளுக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொள்வது எவ்வளவு அவசியம் என்பதைப் புரிந்து கொள்ளவும் இயலும் என நம்புகிறோம்," என்று டாக்டர் ஸ்டீவன் கூறினார்.

திருப்பலிக்குப் பிறகு, பங்கேற்பாளர்கள் ஆலயத்தின் உட்புறம் மற்றும் வெளிப்புறத்தில் உள்ள மூன்று மையங்களான — வண்ணக் கண்ணாடி சன்னல் (stained-glass window), அதிதூதர் தூய மிக்கேல் சுரூபம் மற்றும் லூர்து மாதா குகை (Grotto) ஆகியவற்றிற்கு வழிநடத்தப்பட்டு 'ஜூபிலி நடைபயணத்தில்' (Jubilee Walk) பங்கேற்றனர். சிறிய குழுக்களாகச் சென்று, ஒவ்வொரு இடத்தின் முக்கியத்துவத்தையும் அவர்கள் கற்றுக்கொண்டனர். இதில் பங்கேற்க விரும்பிய குழந்தைகளுக்காகத் தியான சிந்தனைகள் மற்றும் செயல்பாடுகள் அடங்கிய சிறப்புப் புத்தகமும் வழங்கப்பட்டது.

இறுதியாக, சிற்றுண்டியுடன் கூடிய கூடுகையோடு விழா நிறைவுற்றது. இது குடும்பங்கள், தன்னார்வலர்கள் மற்றும் பங்கு மக்கள் அனைவரும் ஒன்று கூடி, தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், அனைவரையும் அன்போடு வரவேற்கும் ஒரு விசுவாசச் சமூகத்தைத் தொடர்ந்து கட்டியெழுப்பவும் சிறந்த வாய்ப்பாக அமைந்தது.

மூலம்: டெசிரா கௌர்

## விண்ணகம் ஏறிய மரியே

இறைமகனைச் சுமந்திட மண்ணில் பிறந்தவரே
கன்னியாய் வாழ்ந்து
விண்ணகம் ஏறியவரே

துயருபவரின் கண்ணீர் துடைக்க
தூயவளாய் எமது ஜெபத்தை
உம் அன்பு மகனிடம் ஒப்படைக்க
எந்நாளும் பரிந்துரைக்கிறவரே

தன்னையே அடிமையாய்
இறையன்புக்கு அர்பணித்தவரே
எஞ்சியிருக்கும் உம் பிள்ளைகள்
எங்களுக்காக மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும்.

பெர்சியுஸ் ஜேம்ஸ்

ஆனால், மரியா இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தம் உள்ளத்தில் இருத்திச் சிந்தித்துக் கொண்டிருந்தார். லூக் 2:19

## “உங்களையும் உங்கள் மந்தை முழுவதையும் கவனமுடன் காத்துக்கொள்ளுங்கள்”



கோலாலம்பூர் மாமறைமாவட்ட அருங்கொடை மறுமலர்ச்சிக் குழுவின் (CKLSC) தமிழ்மொழிப் பணிக்குழுவின் ஏற்பாட்டில், “உங்களையும் உங்கள் மந்தை முழுவதையும் கவனமுடன் காத்துக்கொள்ளுங்கள்” (தி.அப். 20:28) என்ற கருப்பொருளில் ஒருநாள் உருவாக்கப் பயிற்சி, கடந்த ஜூலை 11 அன்று புனித இக்னேஷியார் ஆலயம் (St. Ignatius Church), கெளானா ஜெயா வளாகத்தில் காலை 8.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்ச்சி அன்னை மரியாளின் பரிந்துரையை நாடி ஜெபமாலை செபிப்பதன் மூலம் தொடங்கியது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற இறைப்புகழ் மற்றும் ஆராதனை வழியாக பங்கேற்பாளர்கள் தங்கள் உள்ளங்களை இறைவனின் பிரசன்னத்திற்கு ஆயத்தப்படுத்திக் கொண்டனர்.

இந்நாள் உருவாக்க நிகழ்விற்கு அருட்பணி ஞானசெல்வம் பெரிண்டிஸ் அவர்கள் வழிகாட்டியாக இருந்து, சீடத்துவம் என்ற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு நான்கு முக்கிய தலைப்புகளில் ஆழமான போதனைகளை வழங்கினார். அவை:

- சீடத்துவத்திற்கு அழைப்பு
- தலைமைத்துவமும் சீடத்துவமும்
- சீடத்துவ வாழ்வின் சவால்கள்
- சீடர்களாக உலகிற்கு அனுப்பப்படுதல்

தமது போதனைகளில், அருட்பணி ஞானசெல்வம் அவர்கள் திருவிவிலியச் செய்திகளை அன்றாட வாழ்க்கையில் நாம் சந்திக்கும் எளிய நிகழ்வுகள், குடும்ப அனுபவங்கள் மற்றும் சமகாலச் சூழல்களுடன் இணைத்து விளக்கினார். இதனால், பங்கேற்பாளர்கள் போதனைகளை எளிதில் புரிந்துகொண்டு, அவற்றைத் தங்கள் வாழ்வில் நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஆழமாக உணர்ந்தனர். உண்மையான சீடத்துவம் என்பது அறிவைப் பெறுவதில் மட்டுமல்ல; கிறிஸ்துவின் வாழ்வைத் தமது வாழ்வில் பிரதிபலித்து, அன்பிலும் பணிவிலும் பிறருக்குச் சாட்சியாக வாழ்வதே அதன் நோக்கம் என்பதை அவர் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் 10 பங்குகளைச் சேர்ந்த 80-க்கும் மேற்பட்ட இறைமக்கள் பங்கேற்று, ஒரே விசுவாசக் குடும்பமாக ஒன்றிணைந்து ஆன்மீக வளர்ச்சிக்கான அரிய வாய்ப்பைப் பெற்றனர். பல்வேறு பங்குகளைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள், தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு, சீடத்துவ வாழ்வில் ஒருவரை ஒருவர் ஊக்குவித்தனர்.

மாலை 5.00 மணியளவில் நிகழ்ச்சி நிறைவடைந்தது. நிறைவு அமர்வில், பங்கேற்ற அனைவரும் கிறிஸ்துவின் உண்மையான சீடர்களாக வாழவும், தங்கள் குடும்பம், பங்கு, பணியிடம் மற்றும் சமுதாயத்தில் நற்செய்தியின் சாட்சிகளாக துணிவுடன் செயல்படவும் புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்புடன் உறுதியேற்றுக் கொண்டனர்.

இவ்வுருவாக்க நாள், பங்கேற்ற அனைவருக்கும் விசுவாச வாழ்வை ஆழப்படுத்தி, இறைவனின் அழைப்பிற்கு உண்மையாய் பதிலளிக்கும் சீடர்களாக வாழும் புதிய உற்சாகத்தையும் அர்ப்பணிப்பையும் அளித்த அருள்மிக்க ஆன்மீக அனுபவமாக அமைந்தது.

– ஜோஸ்பின்

குவாதலூப்பே அன்னை ஆலயம், புச்சோங்

## குளுவாங், பாமோல் புனித அன்னம்மாள் திருவிழா

ஜொகூர் குளுவாங், பாமோல் தோட்டத்தில் அமைந்துள்ள புனித அன்னம்மாள் சிற்றாலயத் திருவிழா, முதல் நாளில் கொடியேற்றமும் விவிலிய ஆராதனையும் நடைபெற்றது. தொடர்ந்து ஒன்பது நாட்களாக நவநாள் செபமும், பக்கதர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

ஒவ்வொரு நாளும் ஒரு கருப்பொருளில் சொற்பொழிவு நடைபெற்றது. உச்ச நாளான 25ஆம் திகதி சனிக்கிழமை மாலை ஆறறை மணிக்கு அருள்பணி பீட்டர் இங் அவர்களால் திருவிழா திருப்பலி கொண்டாடப்பட்டது.

மறையுரையில் புனித அன்னம்மாள், மகள் மரியாளை நன்முறையில் இறைவனுக்கு ஏற்ற பிள்ளையாக வளர்த்தார். இயேசுவுக்கு பாட்டியாக திகழ்ந்த அன்னம்மாள் நமக்கும் பாட்டியாக, வழிகாட்டியாக, இயேசுவிடம் நம்மையும் அழைத்துச் செல்ல, நமக்காக மன்றாடும்படிக்கு கேட்டுக்கொள்வோம் என தெளிவுபடுத்தினார்.

ஏற்பாட்டுக்குழு தலைவராக சகோ. பெர்னண்டஸ் மற்றும் அவர் குழுவினர் பொறுப்பேற்று வழி நடத்தினார்கள்.

சுமார் தொள்ளாயிரம் நம்பிக்கையாளர்கள் திருப்பலியில் பங்கெடுத்தும், சுற்று பவனியில் கலந்துகொண்டும், மகிழ்ச்சியோடு அன்னதானத்திலும் உண்டு, பழைய புதிய உறவுகளை சந்தித்து, அகமகிழ்வுடன் இல்லம் திரும்பினர்.

ஆ.வி.டேவிட். குளுவாங்.

## புனித ஞானப்பிரகாசியார் ஆலயத்தில் இரத்ததான முகாம்

தானத்திலே சிறந்த தானம் இரத்ததானம் என்பார்கள். அந்த வகையில் வின்சன் டி போல் இயக்க ஆதரவுடனும் குளுவாங் அரசாங்க மருத்துவனையின் ஒத்துழைப்புடன் இரத்ததான முகாம் கடந்த 2.8.2026 ஞாயிறு அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

பத்தொண்பதாவது ஆண்டாக தொடர்ந்து நடைபெறும் இந்நிகழ்வுக்கு பல்லின மக்களின் ஆதரவும் ஒத்துழைப்பு பாராட்டும் வகையில் அமைந்திருந்தன.

காலை ஒன்பது மணிக்கு துவங்கி மதியம் இரண்டு மணிவரை நீடித்தது. வருகை புரிந்த அனைவரையும், புனித வின்சன் டி போல் இயக்கம் உறுப்பினர்கள் வரவேற்று உற்சாகப்படுத்தினர்.

ஆ.வி.டேவிட். குளுவாங்.



## "இறைவா, உம் விருப்பத்தின்படியே எனக்கு ஆகட்டும்."

### திருவெளி 11:19; 12:1-6, 10; 1 கொரி 15:20-26; லூக்கா 1:39-56

இன்று நாம் அன்னையின் விண்ணேற்புப் பெருவிழாவை (Assumption of Mary) ஆண்டின் பொதுக்காலத்தின் 20ஆம் ஞாயிறாகக் கொண்டாடுகிறோம். இயேசுவின் தாயாகவும், "பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவராகவும்" திகழும் அன்னை மரியா, இயேசுவின் வாழ்வு, இறப்பு மற்றும் உயிர்ப்பு வழியாக நமக்குக் கிடைத்த இறையருளில் பங்கெடுக்கிறார். இறைவனின் திருவுளத்திற்கு முற்றிலுமாகப் பணியும் அன்னையின் அர்ப்பணிப்பு, கடவுள் கேட்பதைச் செய்ய அவர் கொண்டிருந்த தாகத்தைக் காட்டுகிறது. எனவே, தம் திருமகன் முடிவில்லாமல் ஆட்சி செய்யும் விண்ணகப் பெருவாழ்வை, முதன்முதலாகத் தம் ஆன்மாவிலும் உடலிலும் அனுபவிக்கும் பேற்றினை அன்னை மரியா பெறுவது மிகவும் பொருத்தமான ஒன்றாகும்.

இன்றைய பெருவிழா, இயேசுவின் தாயான மரியா விண்ணிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார் என்ற உன்னத உண்மையைக் கொண்டாடுகிறது.

அப்போஸ்தலர்கள் காலத்திலிருந்தே நிலவி வரும் பாரம்பரிய நம்பிக்கையின்படி, அன்னை மரியா தம் வாழ்வின் முடிவில் ("துயில் கொண்ட போது") எருசலேமில் உள்ள ஒரு கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார். சில நாட்களுக்குப் பிறகு விசுவாசிகள் அங்கே சென்றபோது, அன்னை மரியாவின் உடல் அழுகிப்போகும் முன்பே, அவர் உடலோடும் ஆன்மாவோடும் தம் திருமகன் இயேசுவிடம் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டதால் அக்கல்லறை காலியாக இருந்தது.

வெளிப்படுத்துதல் நூல் குறிப்பிடும் பெண், மீட்பரை ஈன்றெடுக்கும் அன்னையோடு ஒப்பிடப்படுகிறது. அந்தப் பெண்ணும் அவளது குழந்தையும் அரக்கனின் (ரோமை அரசாங்கம் மற்றும் தீய சக்திகளின் குறியீடு) எதிர்ப்பை எதிர்கொள்கின்றனர். கடவுள் அந்தப் பெண்ணுக்கு ஒரு சிறப்பு இடத்தை ஆயத்தம் செய்துள்ளார். இது, அன்னையின் உடல் அழுகிப்போகாமல் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பேற்றினைக் குறிப்பதாகப் பலர் நம்புகின்றனர்.

மேலும், திருப்பாடலில் சொல்லப்படும் அரசியாகவும் அன்னை மரியா உருவகிக்கப்படுகிறார். அரசி அரசனுக்குப் பக்கத்தில் மாட்சிமையோடும் மகிமையோடும் வீற்றிருப்பது போல, அன்னை மரியாவும் தம் மகன் இயேசுவின் விண்ணக மகிமையில் பங்கெடுக்க விண்ணிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அரசன் தன் அருகில் அரசியை விரும்பவது போல, இயேசுவும் தம் தாயை உடலோடும் ஆன்மாவோடும் விண்ணக மகிமையில் தம்மோடு வைத்திருக்க விரும்புகிறார்.

புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய கடிதத்தில், விண்ணகத்தின் மகிமையைப் பற்றிப் பேசி மக்களை உற்சாகப்படுத்துகிறார். கிறிஸ்து கடவுளின் "முதற்கனியாக" விண்ணக மகிமையில் தமக்கான இடத்தைப் பிடித்துள்ளார் என்கிறார். கிறிஸ்துவுக்குப் பிறகு, அவரைச் சார்ந்த அனைவரும் அந்த மகிமையை அடைவர்.

உறுதியாகவே, இயேசுவைச் சார்ந்தவர்களின் பட்டியலில் அவருடைய தாய் மரியாவே முதலிடத்தில் இருக்கிறார். எனவே, இறுதி காலத்தில் விசுவாசிகள் அனைவரும் பெறவிருக்கும் அந்த மகிமைப்படுத்தப்பட்ட உடலை, தம் மகனுக்கு அடுத்தபடியாக முதன்முதலில் பெற்று விண்ணகத்தின் பேரின்பத்தைப் பகிர்ந்துகொள்ள அன்னை மரியா தகுதியானவர் ஆகிறார்.

நற்செய்திகளில் மரியாவின் விண்ணேற்பு நிகழ்வு நேரடியாகப் பதிவு செய்யப்படவில்லை என்றாலும், இன்றைக்கு வாசிக்கப்படும் மரியா - எலிசபெத் சந்திப்பு நிகழ்வு அன்னையின் உயர்வை நமக்கு உணர்த்துகிறது.

"உம் விருப்பப்படியே எனக்கு ஆகட்டும்" என்று அன்னை இறைவனுக்குத் தம் ஒப்புதலைக் கொடுத்ததால், இறைமகன் அவரது கருவில் உருவானார்.

மரியா தனது கர்ப்பத்தின் தொடக்கக் காலத்தில் இருந்தபோதிலும், எலிசபெத்து மரியாவிற்குள்ளும், அவரது தம் கருவிலிருந்த குழந்தையிடமும் இருந்த தூய்மையையும் இறைபிரசன்னத்தையும் கண்டுகொண்டார். இரு தூய பெண்களும் சந்தித்தபோது, எலிசபெத்தின் கருவிலிருந்த குழந்தை மகிழ்ச்சியால் துள்ளியது! மரியாள் தன்னைவிட சிறியவள், உறவினர் என்பதயெல்லாம் மறந்து, தூய ஆவியாரால் நிரப்பப்பெற்று “என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் வாய்ப்புப்பெற்றதெப்படி” என்று மகிழ்ச்சியால் அறிக்கையிடுகிறார்.

ஆண்டவராகிய இயேசுவின் சீடர்கள் என்று நம்மை அழைத்துக்கொள்ளும் நம் அனைவருக்கும் இந்தப் பெருவிழா ஒரு நினைவூட்டலாக அமைய வேண்டும். தூய பவுல் கூறுவது போல, நாம் கிறிஸ்துவைச் சார்ந்தவர்களாக வாழ முயற்சித்தால், நம் மீட்பராகிய இயேசுவோடு நாமும் விண்ணக மகிமையில் நிச்சயம் பங்கெடுப்போம்.

தம்முடைய எதிரிகள் அனைவரையும் தம் பாதங்களின் கீழ் விழச்செய்த ஆண்டவரோடு சேர்ந்து, நாமும் ஒரு நாளில் புதுப்பிக்கப்பட்ட உடலோடு விண்ணகத்தின் முழுமையை அனுபவித்து மகிழ்ச்சியோடு கொண்டாடுவோம்!

அன்னை மரியாவைப் போல, "உம் விருப்பப்படியே ஆகட்டும்" என்று கூறி, ஆண்டவர் இயேசுவைப் பின்பற்றி வாழ்ந்தால் இதுவே நமது முடிவில்லா வாழ்வாக (விண்ணக வாழ்வாக) அமையும்.

பெர்சியுஸ் ஜேம்ஸ்

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:

மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015